செ.வெ.எண் : 25/ ஏப்ரல் நாள் : 28.04.2021

**இராமநாதபுரம் மாவட்டம்**
**சக்கரக்கோட்டை மற்றும் பட்டணம்காத்தான் ஊராட்சி பகுதிகளில் நடைபெற்ற காய்ச்சல் பரிசோதனை முகாம்களை**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டார்**

இராமநாதபுரம் மாவட்டம், சக்கரக்கோட்டை மற்றும் பட்டணம்காத்தான் ஆகிய ஊராட்சி பகுதிகளில் இன்று (28.04.2021) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள், கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொது சுகாதாரத்துறையின் சார்பாக நடத்தப்பட்ட காய்ச்சல் பரிசோதனை முகாம்களை நேரில் சென்று பார்வையிட்டார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவலை தடுப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் தற்போது 707 நபர்களுக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். அதில் 212 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் மீதமுள்ள 495 பேர் அவரவர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு மருத்துவ சிகிச்சை மற்றும் மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது. மாவட்டத்தில் மொத்தம் 66,000 க்கும் மெற்பட்ட நபர்களுக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

நோய்த்தொற்றால் பாதிக்கப்படுபவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக ஆக்சிஜன் வசதியுடன் கூடிய படுக்கைகள் இராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 600-ம், பரமக்குடி அரசு மருத்துவமனையில் 100-ம் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. அதேபோல கல்லூரிகள், தனியார் ஆஸ்பத்திரிகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் என் 1,500-க்கும் மேற்பட்ட படுக்கைகள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன. சூழ்நிலைக்கு ஏற்ப இதனை அதிகரித்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள பகுதிகளில் காய்ச்சல் பரிசோதனை செய்ய மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன. கொரோனா பரவலை கட்டுப்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு ஞாயிற்றுக்கிழமை பொது ஊரடங்கு மற்றும் பிற நாட்களில் இரவு 10 மணி முதல் 4 மணி வரை ஊரடங்கு உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகளை அறிவித்துள்ளது.

குறிப்பாக, திருமணம்/திருமணம் சார்ந்த நிகழ்வுகள் கலந்து கொள்வோர் எண்ணிக்கை 100 நபர்களுக்கு மிகாமல் மற்றும் இறப்பு சார்ந்த நிகழ்வுகளுக்கு கலந்து கொள்வோர் எண்ணிக்கை 50 நபர்களுக்கு மிகாமல் அரசு வெளியிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுடன் நடத்துவதற்கு அதில் கலந்து கொள்வதற்கும் தடையில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்று வேகமாக பரவி வரும் சூழ்நிலையில் மேற்குறிப்பிட்டுள்ள அறிவிப்பினை பொதுமக்கள் தவறாமல் பின்பற்றிட கேட்டுக் கொள்ளப்படுகிறது. மீறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சக்கரக்கோட்டை சமுதாய நலக் கூடத்தில் நடைபெற்ற காய்ச்சல் பரிசோதனை முகாமில் இரண்டாம் தவணை கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டார். தொடர்ந்து, ஓம்சக்தி நகர் பகுதியில் ஊராட்சி நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கிருமி நாசினி தெளிக்கும் பணிகளையும், கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்ட ஓம்சக்தி நகர் மற்றும் காட்டூரணி உள்ள கட்டுப்பாட்டு பகுதியில் (Containment Zone) மேற்கொள்ளப்பட்டுள்ள கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் பார்வையிட்டார்.

இந்த ஆய்வின் போது, இராமநாதபுரம் சார் ஆட்சியர் டாக்டர்.என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., பொது சுகாதாரத்துறை துணை இயக்குநர் மரு.பொற்கொடி, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.வீ.கேசவதாசன், வட்டாட்சியர் திரு.வி.ரவிச்சந்திரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.சந்திரமோகன், திரு.சண்முக நாதன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**